# முருகன் இசையமுதம்.

பக்தி-7

...ருத்தி ... சங்கம்
மதுரை.
பால ஷண்முகானந்த சபா.



விலை 6 அணா.] A... ...ர்.

உரிமை பதிவு.



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

27-1-1979

ஸ்ரீ அபிவிருத்தி சங்கம்
மதுரை.
பால ஷண்முகானந்த சபா.

# முருகன் இசையமுதம்.

ஆக்கியோன்:-

A. சுருளியாண்டிப் பாவலர்,
கோம்பை.

மதுரை காமராசர் பல்கலைக்கழக
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல்துறை.

★

பதிப்பகம்:-
பங்கஜம் பிரஸ், போடிநாயக்கனூர்.
முதற்பதிப்பு.
1944.

# இசையின் மாண்பு.

இசைப்பவனாய், இன்றேல், இசை கேட்டுருகும் மனத்தினனாய் ஒருவன் உலகில் இருத்தல் வேண்டும். இசையின் இனிமை உணராதவன், கொலைஞனுக்குச் சமானமாவன்.

★

"ஓடுங் கொடிய விடப்பாம்பும் பேயும் இசை கேட்டுள்ளுருகி
ஆடுங் கருங்கல் அசைந்துவரும் அழுதகுழவி குரலடங்கும்
மாடும் இசை கேட்டுழுதுவரும் வந்த பசுவும் பால் கறக்கும்
பாடும் இசை கேட்டுருகாரை என்னென்றுரைப்பேன் பாவலரே"?

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல்துறை.

# சிறப்புரைகள்.

திருவாளர், ஏ. சுருளியாண்டிப் பாவலர், யாத்த பாடல்களடங்கிய "முருகன் இசையமுதம்" என்னும் புத்தகத்தைப் படித்தேன். பாடல்கள், ஆற்றொழுக்காக எளிமையும் இனிமையுங்கொண்டு, உயர் கருத்துக்களைத் தெரிவிக்கின்றன. தெய்வத்தினிடம் அன்பையும், நீதியில் ஆர்வத்தையும் இப்பாடல்கள் ஊட்டுகின்றன. அன்பர்கள் இப்பாடல்களைப் பலவகையிலும் போற்றிப் பயனடைவார்களாக.

இங்ஙனம்,

நுங்கம்பாக்கம்,
சென்னை.
1—1—1944.

**வித்துவான், மறை திருநாவுக்கரசு,**
எச். ஆர். இ. போர்டின்,
சைவ சமய பிரசாரகர்.

---

உத்தமபாளையம், உயர்தரப்பள்ளித் தமிழாசிரியர்,
திருவாளர்
**வித்துவான் சி. இராமசாமி அவர்கள்**
வழங்கிய சாற்றுக்கவி.

வெண்பா.

1. முன்னு தமிழ்ப் பாவால் முருகன் இசையமுதம்
என்னுமொரு கீர்த்தனநூல் ஈந்தனனால்—மன்னும்
அருளார் நிறை கோம்பை யாம்பதியில் வாழும்
சுருளி யாண் டிப்பா வலன்.

2. எங்குந் தமிழர் இசை வேட்கு மிந் நாளில்
தங்கும் முருகனருள் தான் வேட்டுப்—பொங்கி
வழியும் உணர்வால் வடித்தா னமுதம்
எழிலார் கோம் பைப்பா வலன். (23—3—44)

ஐயன்மீர்!

முருகன் இசையமுதம் என்னும் இப்பாமாலை யிலுள்ள கீதங்கள் சொற்சுவையும், பொருட்பொலி வும் உடையன. இதை ஆக்கியோன், செஞ்சொல்லை நினைந்துருகி நெஞ்சைப் புண்ணுக்காது, மனத்தி லுள்ள கருத்தைத் தெளிந்த முறையில் வெளிப்படுத் தும் வாக்கு வன்மை உடையோனவன். இப்பாடல் களைப் பயில்வோர், தமிழ்க் கடவுளான முருகன் திரு வருளுக்குப் பாத்திரராவர் என்பது எனது துணிவு.

வரகவி,

கன்னிகாபரமேஸ்வரி பாடசாலை, கோம்பை. 7—2—44.

**R. திருமலை ஜக்கையா,**
ஆசிரியர்.

---

கோம்பை நகர், திரு. A. சுருளியாண்டிப் பாவலர் இயற்றிய "முருகன் இசையமுதம்" என் னும் நூலைப் பார்வையிட்டேன். பாடல்கள், சொன் னயம், பொருணயம் மிக்கனவாய், உயர் கருத்துக் களை மக்களுக்கு ஊட்டத் தக்கனவாய், அழகிய சந் தங்களுடையனவாய் அமையப்பெற்றுள்ளன. பக்தி ரசம் மிகுந்த இந்நூலைப் படித்துணரும் மக்கள், முருகப் பெருமான் திருவருளைப் பெற்றுய்வரென நம்புகிறேன்.

சன்மார்க்கநிலையம், கோம்பை. 24—3—44.

ஆசிரியர்,
**வீ. பரமசிவம்.**

இயல், இசை, நாடகம் என வழங்கிவருகின்ற முத்தமிழுள், இயலும் நாடகமும் போல் இசை வளர்ச்சி பெறவில்லை. இடைக்காலத்தில் வளர்ச்சி குறைந்திருந்தது. சென்ற சில ஆண்டுகளாகச் செட்டிநாட்டு வள்ளல் இராசா. சர். அண்ணாமலைச் செட்டியாரவர்களின் நன்முயற்சியாலும், சர். R. K. சண்முகம் செட்டியாரவர்கள் போன்றோரின் ஒத்துழைப்பாலும் தமிழிசை வீறுகொண்டு முழங்கி வருகின்றது. இம்முழக்கம் தமிழர்களின் எஃகுச் செவிகளில் இனிமையாய்ப் பயப்பதற்குச் சிறந்த தமிழ்ப் பாட்டுக்களைப் பல கவிஞர்கள் பாடி வருகின்றார்கள். அக் கவிஞர்களுடைய தொண்டு தற்காலத்தில் மிகவும் மேன்மையாக மதிக்கப்பெறுவதொன்று. அத்தகைய தொண்டில் இதன் ஆசிரியராகிய, உயர்திரு. அ. சுருளியாண்டிப் பாவலர் அவர்கள் ஈடுபட்டிருப்பது, தமிழ் நாட்டார் மகிழ்வதற்குரியதொன்றாம். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடந்த இசை மாநாட்டில் இவ்வாசிரியரது பாடல்கள் பாடப்பெற்றன. ஆசிரியர் இசைத்த இசைப்பாடல்கள் தமிழிசையின் இசையை மிகுவிப்பனவாகும் என்பது எனது கருத்து.

கோம்பை,
29-4-'44.

**தி. பொ. நாராயணசாமி பாரதி,**
வித்துவான் மாணவன், சன்மார்க்க சபை,
**மேலைச்சிவபுரி.**

# ஆக்கியோன் உரை.


பாடல்கள் வரைய வேண்டுமெனும் அவா மேலீட்டால், இதற்கு முன் யான் எழுதி வெளியிட்ட **நாட்டுப் பாட்டு, சத்கீத மஞ்சரி, மெய்ப்பொருள் நாயனர் சரித கீதங்கள்** ஆகிய நூற்களை ஆதரித்து என்னை ஊக்கிய இசைவாணர்களுக்கும், தமிழ் அறிஞர்கட்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.

இந்நூலை அச்சிடுதற்குப் போடிநாயக்கனூர் "பங்கஜம் ஹவுஸ்" உயர் திருவாளர், A. S. சுப்பராஜ் அவர்கள் இருபத்தைந்து ரூபாய் உதவினர்கள். மற்றும் உதவி செய்த செல்வர்களின் பெயர்கள் பிறிதோரிடத்தில் பிரசுரமாகியுளது. பொருளுதவியாளரனைவர்க்கும் என் மனமார்ந்த நன்றி.

சங்கீதம், சாகரம் போன்றதென்பர். அப்பரந்த சாகரத்துள் மூழ்கிப் பல நன்முத்துக்களைச் சேகரித்து வந்து தமிழ் மக்கட்குதவிய பெரியார் பலர். "புலியைப் பார்த்துப் பூனை சூடிட்டது" போன்று, யானும் இசைக்கடலின் கரையில் சிந்திக்கிடந்த சில முத்துக்களைச் சேகரித்துக் கோத்து "**முருகன் இசையமுதம்**" எனும் பெயரிட்டு இசைவாணர்க்குதவ முன் வந்துள்ளேன். என் முத்துக்களையும் நன் முத்துக்களாய்க்கருதி, இசைவாணரும் தமிழறிஞரும், ஏற்றுக்கொள்வரென நம்புகிறேன்.

கோம்பை,
1—5—'44.

அன்பன்,
**A. சுருளியாண்டிப் பாவலர்.**



A. சுருளியாண்டிப் பாவலர்.

அவ்வை
தி. க. சண்முகம் நூலகம்.

உ

# முருகன் இசையமுதம்.

## காப்பு.

(வெண்பா.)

இன்னுரை சேர் பாட்டால் முருகன் இசையமுதம்
என்னு மொரு நன்னூலை யானெழுதப்—பொன்மயிலோன்
கந்தனுக்கு மூத்தோன்மைக் கந்தரத்தான் மைந்தனெனும்
தந்தி முகன் தாளே சரண்.

## அவையடக்கம்.

(கலிவிருத்தம்)

கந்தப் பன்மிசை யெற்குள காதலால்
இந்தப் பண்களி யம்பித்தி னந்தினம்
வந்திப் பாமென ஏட்டில்வ ரைந்தனன்
சந்தப் பாவலர் தானும் வெறுப்பரோ?

## நூல்.

### விநாயகர் துதி.

1 விநதா சுத—என்ற மெட்டு.

இராகம்-ஹரிகாம்போஜி] [தாளம்-ஆதி

பல்லவி

* கணநா தாசுகு ணகஜ மாமுகக்
கருணா கரதே வா சுர (கண)

---

குறிப்பு:- * இக்குறியிட்ட பாடல்கள் யான் முன்பு வெளியிட்ட "சத்தே மஞ்சரி" என்னும் நூலிலிருந்து இதில் சேர்க்கப்பெற்றவையாகும்.
(ஆக்கியோன்)

அநுபல்லவி

குணபோதா அருள் தருநீதா பவ
வினைதீர்த் தாண்டிடும் விக்கினேசுர (கண)

சரணம்

ஆதி மூலப் பொருளான தயாபரா!
அத்தி முகமிலகும் சித்திவி நாயகா!
பாதாம் புயந்தொழும் சுருளியாண்டி சொலும்
கீதாஞ் சலிகொள்வி நோதா தயை புரி. (கண)

## கலைமகள் துதி.

**2** ஜகஜ் ஜனனீ—என்ற மெட்டு.

இராகம்-ரதிபதிப்ரியா] [தாளம்-ஆதி

பல்லவி

சரஸ்வதியே கலைச் சாகரந் தாராய்.

அநுபல்லவி

சிரத்தை யாகவுன் அடி பணிந்தேன்
சேய னுவினில் அருள்புரி யாயோ? (சரஸ்)

சரணம்

வெண்டா மரைமலர் மேவிடும் வாணி!
வேதன் நாவுறை பூரணி!
தண்டமி ழாற்கவி சாற்றும் புலவரைச்
சந்ததம் காக்கும் தாயலவோ நீ? (சரஸ்)

**3** சொப்பன வாழ்வில்—என்ற மெட்டு.

இராகம்-விஜயநாகரி, புவனகாந்தாரி] [தாளம்-ஆதி

பல்லவி

வித்தக வாணீ வருவாய்.
வேண்டி நின்றேம் தாயே கலைமகளே! (வித்)

அனுபல்லவி

புத்தக பாணீ புவிமேல் புலவரெல்லாம்
போற்றும் தயாபரியே. (வித்

சரணங்கள் (புவனகாந்தாரி)

வேதா நாவினிலே—விளங்கிடும்
மாதா சரஸ்வதியே—நின்
பாதம் துணையெனவே—பனுவல் சொலும்
பாவலர்க் கருள் வாயே. (வித்

(விஜயநாகரி)

வெண்டா மரையினிலே—மகிழ்வுடன்
வீற்றிருப்பாய் வீணையுடன்.
கண்டின் சுவைப் பாடல் பாடித் துதித்தோம்
கருணை நீ புரிவாயே. (வித்

## 4 முருகன் தோத்திரப் பாடல்கள்.

தநயுநீ ப்ரோவ—என்ற மெட்டு.

இராகம்-பைரவி] [தாளம்-ஆதி

பல்லவி

மரகத ரூப மயில்மிசை யேறிவா
வள்ளி தெய் வானை யுடனே. (மர

அனுபல்லவி

பெருநிதி யே என தரு மணியே குகா!
இருமையி லும் சுகம் தருவதற் கென்னிடம்(மர

சரணம்

பொய்யுடல் வாழ்வை மெய் யென எண்ணி
புவியி லலைந்தது போதுமென் போதகா!
துய்ய பொற் பாதம் துணை தரு வாயே
சுருளி யாண் டிதொழும் குருபரனே நீ (மர

5 எந்த நேர்ச்சின—என்ற மெட்டு.

இராகம்-உதயரவிச் சந்த்ரிகா] தாளம்-ஆதி

பல்லவி

செந்தில் வேலனே சிவன் பாலனே
அந்த மேவு சுப்ர மண்ய சீலனே.

அனுபல்லவி

சந்ததம் நினை வந்தனை செய்தேன்
வந்து என்னைக் காத்தல் உந்தன் பாரமே (செ

சரணம்

எந்த நேர மேனும் உந்தனை மறவா
எனை நீ மறந்தாய் இது ஞாயமா?
செந் தமிழ்க் கவி சுருளி யாண்டி நாளும்
சேவிக்கும் பொற் பாதா குற வள்ளி நாதா!(செ

6 பராத் பரா—என்ற மெட்டு.

இராகம்-வாசஸ்பதி] [தாளம்-ஆதி

பல்லவி

சடாட் சரா தனி வேற்கரா!
தந்தி சோதரா சரண் குருபரா! (சடா

அனுபல்லவி

கடாட்சமே தரும் சீலனே!
கந்தனே! கருணா கரனே! குகனே! (சடா

சரணம்

திரிபுர மெரித்த சிவனின் பாலா!
தேவர் துயரம் தீர்த்த பழனி வேலா!
அறுமுக மிலங்கும் திரு முருகா!
அன்ப ருள்ள மேவும் இன்ப வாரியே! (ச

**7** நகுமோ மு—என்ற மெட்டு.

இராகம்-ஆபேரி] [தாளம்-ஆதி

பல்லவி

* மயில்மீது வருவாயே மாதேவன் தருசேயே
வள்ளி தெய்வ யானை மருவிடு முருகனே! (மயி

அநுபல்லவி

அயில்வேலா அருளாளா அடியார்க் கனுகூலா
வயல்சூழ் பழனி புரிவாழ் ஜெயசீலா
—வடிவேலவனே நீ (மயி

சரணம்

அயன்மாலும் சிவனும் அருள்நாடும் குகவேளே!
தயையாக வரமீயும் சாமீ பெருமாளே!
ஜெய மேவுங் குமரேசா! தினமும் நின் புகழ் பாடி
நயமாய் பஜனை புரிவோர்க் கருள் நேசா—
சுருளியாண்டி தொழ நீ (மயி

**8** ஸரஸீருகா—என்ற மெட்டு.

இராகம்-முஹாரி] [தாளம்-ஆதி

பல்லவி

* வடி வேலனே—வரந் தரும்—உமை பாலனே!
வள்ளி லோலனே! (வடி

அநுபல்லவி

அடியார் மிடியை யகற்றும் முருகா!
அந்த மிகுந் திடும் செந்திலம் பதி வாழ் (வடி

சரணம்

தாதை போதகா! சரவண பவா!
வேத விற்பனனே! விமலா குகா!
பாத பத்ம சீரைப் பாடும் சுருளி யாண்டி
ஓதும் கீதந் தனக் குவந்தேவந் தாளும் (வடி

**9** சுஜன ஜீவனு—என்ற மெட்டு.

இராகம்-கமாஸ்] [தாளம்-ரூபகம்

பல்லவி

* பேதை நெஞ்சமே-விடு-தீய வஞ்சமே-அதி (பே

அநுபல்லவி

சாதி பேதமே மூடர் சாற்றும் வாதமே-இதைச்
சற்றும் சாரமில் வெற்றுரை யெனத்
தள்ளல் நீதமே-அதி (பே

சரணம்

சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தை நாடு-இறை
தண்ணருள் நினைந்துருகிச் சந்ததம் பாடு.
அமர வாழ்க் கையே தரும்
அடியர் சேர்க்கையே-இதில்
ஐய மொன் றிலை மெய் யொன்றே துணை
அரனையே நினை-அதி (பே

**10** உப சாரமு—என்ற மெட்டு.

இராகம்-பைரவி] [தாளம்-ரூபகம்

பல்லவி

தணிகா சலம் சாரேனோ?
சாமி யழகைப் பாரேனோ? (தணி

அநுபல்லவி

அணியார் பதம் பணியேனோ?
அன்பு கூர்ந்தங் கமர்ந்திடேனோ? (தணி

சரணம்

பிணியி னின்றும் பெயரேனோ?
பேரா னந்தம் பெற்றிடேனோ?
பணி செய்தடி பரவேனோ?
பரமன் புகழ் பாடேனோ?

தணியாப் பவம் தவிரேனே?
சாந்தி பெற்றுத் தழையேனே?
துணை கண்டுளம் மகிழேனே?
சுத்தானந்த சுகம் தொடேனே? (தணி

**11** ஜானகி ரமண—என்ற மெட்டு.

இராகம்-காபி] [தாளம்-ஆதி

பல்லவி

கானமே புவியில் புனிதமிகுந்தது
கந்தன் செந்தில் வேலன் கவின்-சொலும் (கா

அனுபல்லவி

மோன மந்திரந்தனைச் சிவனார் செவியில்
முன்னா ளுரைத்த பொன்மா மயிலோன் (கா

சரணம்

ஞான ஷண்முகனும் நற்குண சீலனை
நங்குறை தீர்க்கும் பரங்கிரி வேலனை
தேனினு மிகுசுவை செறிந்த நற்றமிழால்
தினந் தொழும் சுருளி யாண்டியோதும் (கா

**12** பூமியில் மானிட—என்ற மெட்டு.

கண்ணிகள்

1. எத்தனை தானுப தேசங்கள் கேட்கினும்
என்னுள மடங்கும் வழி காணேன்.
சுத்த நிர்க்குணபரஞ் சோதியென் னுண்டவா!
தூயப தாம்புய தரிசனந் தா. (எ

2. இத்தரை மீதுள இன்பக் கனவுகள்
என்றும் சதமென இருப்பேனே?
அத்தன் செவிதனில் மந்திர முரை செய்த
அறுமுக சரவண பவ குகனே!

3. தேங்கமழ் மாபழ னுபுரி மேவிடும்
சீலனே நின்னையே சிந்தை செய் தேன்.
தீங்கவி யால் தினம் சுருளி யாண்டி தொழும்
திருமுருகா! மால் மகிழ் மருகா! (ஏ

**13** பூங்குயில் கூவும் பூஞ்சோலையில்—என்ற மெட்டு.

இராகம்-அஸாவேரி] [தாளம்-ஆதி

பல்லவி

தேம் பொழில் சூழ் பழ னுபுரி முருகா!
திருவருள் புரிவாய் மால் மகிழ் மருகா! (தே

அனுபல்லவி

தீங்கவி வாணர் தினந்துதி பாட
திருமிகுங் காவடி யார்மகிழ்ந் தாட
சேவலங் கொடிவருங் கூட (தே

சரணங்கள்

ஓங்கிய வடிவேல் தாங்கிய குகனே!
உன்னடி பணிந்தேன் ஞான ஷண்முகனே!
பாங்குடன் வந்தெனைக் காத்தலுன் கடனே!
பாவையர் வள்ளி தெய் வானையினுடனே. (தே

தந்தை தாய் சத்குரு தெய்வமும் நீயே!
சரவணப் பொய்கையில் சனித்த நற் சேயே!
செந்தமிழ்ச் சுருளி யாண்டியின் நேயா!
தீனத யாபர னுகிய தூயா! (தே

**14** தஞ்சம் நீ கதியே—என்ற மெட்டு.

இராகம்-சிந்து பைரவி] [தாளம்-ஆதி

பல்லவி

தங்க வேல் முருகா-வேல் முருகா!
துங்கா மாவின் மன மகிழ் மருகா! (தங்

அநுபல்லவி

பங்கய பாதனே! பரங்கிரி யோனே!
பணியாப் பிழை புரிந்தேன்-அறியாயோ?
பன்னிருகரா! (தங்

சரணம்

ஓராறு மாமுகா! உன்னருள் கோரி
உள்ள முருகினேன் மாமயி லேறி
வருவதி லேன் தடை சரவண பவனே!
சுருளி யாண்டி தொழும் தூயபொற் பாதா!(தங்

**15** ஆனந்த மேன் சொல்வனே—என்ற மெட்டு.

இராகம்-சிந்து பைரவி] [தாளம்-ஆதி

பல்லவி

பூலோக வாழ்க்கை சதமா—என்
றென்றும் சாசுவதமா? (பூ

அநுபல்லவி

பாலா பிஷேக வேலன்—நற்
பதம் மறத்தல் தகுமா! (பூ

தொகையறு

கண்டதே காட்சியாய்க் கொண்டதே கோலமாய்
உண்டுண்டு றங்கி வாழ்ந்தோம்.

காமாதி காரமே நாமோதி நாள் தொறும்
கருத் தெலாங் கெட்டு வீழ்ந்தோம்.

பாட்டு

மயி லேறும் சுப்ரமண்யம்
தருவான் நமக்கு கண்யம். (பூ

## 16 சந்த்ர சூரியர்—என்ற மெட்டு.

இராகம்-பியாக்] [தாளம்-ஆதி

கண்ணிகள்

* மனக் குரங் கதனை யடக்கிட வோர்வழி
வகுத்தாள் வடிவேலா
கணப் பொழு தெனினும் நின் பதத்தினைத் துதித்துநான்
கதிபெற வருள் சீலா! (மன)

தொகையறு

கோல வானோர் புகழ் திருத்தணி காசலக்
கோ வெனும் குணத்தின் குன்றே
சீலமே திகழும் சன் மார்க்கத்தி லெந்தனைச்
செலுத்த லுன் கடமை யின்றே.

பாட்டு

கூர் கொண்ட வேலும் மயிலுடன் குக்குடக்
கொடி கொள் குமரேசா!
சீர் கவிச் சுருளி யாண்டியின் நேசா!
செந்திலம் பதி வாசா! (மன)

## 17 சரவண பவா—என்ற மெட்டு.

இராகம்-கல்யாணி] [தாளம்-ஆதி

பல்லவி

* அறு முகவனே! அரனின் மகனே! (அறு

அநுபல்லவி

திரு முருகனே! செந்திலம் பதி வாழ்
சேவலங் கொடிகொள் காவலா குகா! (அறு

சரணம்

இரவு பகலாய்த் தினமு முனையே
சரணென வுனே னருள் புரிய வா.
திரிபுரமெரி தரும் சிவன் சுதா!
தீங்கவிச் சுருளி யாண்டி புகழ்ந்திடும் (அறு

**18** தேடி வந்தேனே வள்ளி மானே—என்ற மெட்டு.

இராகம்-சிந்து பைரவி] [தாளம்-ஆதி

பல்லவி

மரகத மயில்மிசை வருவாயே—உயர்

அனுபல்லவி

பரகதி யுதவிடும் சிவன் சேயே—நீயே! (மர

மகுடங்கள்

மாய வாழ்வு சதமல—உனதிரு
தூய பாத தரிசன முதவிட (மர

வஞ்சக மிஞ்சிய நெஞ்சினர் தம்முற
வஞ்சியுன் செஞ்சரண் அஞ்சலி செய்தனன் (ம

மனமொரு நிலையினில் இனிதமை வுறஅருள்
நனிசெயு மறுமுக சரவண பவகுகா! (மர

சரணம்

சுருளி யாண்டி பணியும் சுப்பிரமண்யா!
சோலை மேவு பழனியம் பதியினில்
மாவை போக முடனுறை முருகனே! (மர

**19** ஒருநாள் ஒரு பொழு தாகிலும்—என்ற மெட்டு.

இராகம்-கமாஸ்] [தாளம்-ஆதி

பல்லவி

முருகா! என வொரு முறை யுரை செய்திடில்
முன்னுள் வினை யேகும்-செந்தில் வளர் ஞான (மு

அநுபல்லவி

உருகா நெஞ்சினர்—நல்லருள் நாடி
உருகா நெஞ்சினர் பெருவாழ் வெய்திடார்
ஓராறு மாமுகன் சீரைப் புகழ்வோமே. (மு

சரணம்

சங்க முழங்கு பரங்கிரி தங்கிய
சாமி சத்வகுண போதன்—அதி
துங்கம் பொங்கிவளர் கந்தன் சந்தக்கவிச்
சுருளி யாண்டிதொழும் பாதன்—இனித்
தங்கவேற் கரனையே—எங்கு மொளிர்
தங்கவேற் கரனையே—சந்ததம்
தஞ்ச மென்றிரு மனமே—உனது
சஞ்சலம் விலகிடுமே—அரிய
சாயுச்ய பதம் வருமே—மகிழ்வாய் (மு

**20** சீராம வரதனே—என்ற மெட்டு.

இராகம்-மத்யமாவதி] [தாளம்-ஆதி

பல்லவி

* பாராமுக மேனையா—பன்னிரு கையா! (பா

அநுபல்லவி

நீரார் புவியதனில் வேறோர் துணையுமில்லை
நிருமல நிறையுன தருளினை யுதவிட
வருவதி லெனதடை யறுமுக முருகனே (பா

மகுடங்கள்

பரிபக் குவநிலை யறிசற் குணமதை
இதயக் கனிவுட னுதவிக் கதிதரப் (பா

பாதக மேநிறை காதக ரோடுற
வாகியே வாடிடா தாதர வேதரப் (பா

பலதுய ரதிலக நலிவுறு மடியவர்
நலமுறு வணமுயர் வரமதை யுதவிடப் (பா

சரணம்

கோர சிந்தனைகுடி கொண்ட சூர பத்மனைக்
கொன்று அமரர் தமை யன்று புரந்தன நீ
சார நிறைந்த கவி சாற்றும் சுருளி யாண்டி
சற்கவி யைச்செவி யொப்பியே திப்பிய
நற்கதி யைத்தரு தற்குளம் வைத்திடப் (பா

மகுடங்கள்

தாமத மேன்முரு காமயில் மீதினில்
வாகுழ காகரு ணாகர தேவனே!
தந்தி சோதரகு காசரவண பவ
கந்த சாமியெனு மாவடி வேலனே!
சகமதிலுள திருமிகநிறை பதிகளிலுயர் பழனியிலுறை
சாமியே புனித வாமியின் தனய
சந்தத் தொடு வந்தித்தனன்
செந்திற்பதி கந்தப்பனே!
சடுதியி லருள்புரிவாய் மனமதுமிக மகிழ்வாய்
சகலா கமமூ லமுநீ விமலா
புவியே வலமா கியகா வலனே! (பா

**21** வதனமே சந்த்ர பிம்பமோ—என்ற மெட்டு.

இராகம்-சிந்துபைரவி] [தாளம்-திஸ்ரம்

பல்லவி

கலபமயூர வேலனே—கவின்மிகு சீலனே! (கல

அனுபல்லவி

கார்முகிலார் தணிகையில்வாழ் கடவுளே! குகா! (கல

சரணம்

வந்தருள்செய . மனம் வல்லையா?
மற்றென்னகுறை தான் சொல்லையா?
கந்தனே உனக் கிது மலையா?
கருணை யில்லையா? (கல

## 22 வண்ணான் வந்தானே—என்ற மெட்டு.

இராகம்-வராளி] [தாளம்-ஏகம்

கண்ணிகள்

* செந்தூர்க் கந்தனடி—சிவன் மகன்
சேவை செய்வமடி.
வந்தனை செய்பவர்க் கின்ப மளிப்பான்
சந்ததம் நற்கதி தந்துக ளிப்பான்
மாபழனி வாழ் முருகன்—முருகன்—திரு
மாலின் மன மகிழ் மருகன்—மருகன்—திருச் (செ

கோழிக் கொடி பிடிப்பான்—திருப்பரங்
குன்றின் மிசை யிருப்பான்.
ஆழி சூழும் புவியை வலம் வந்தோன்
அத்தன் செவிதனில் மந்திரம் புகன்றோன்
ஆறுமுக வேற் குகனும்—குகனும்—அர
வாபரணன் அருள் மகனும்—மகனும்—திருச் (செ

வெற்றிவடி வேலன் விகசித
வள்ளி மணவாளன்.
கற்றறிந் தோர் புகழ் சுருளி யாண்டி
கவிதனைக் கொளுங் கூர் வேலாண்டி
கந்தனை நே ரானவ ரார்—நீ பார்—அவன்
கழல் தொழுதால் வந்திடும் சீர்—இதைத் தேர்—திருச் (செ

## 23 கவலையைத் தீர்ப்பது நாட்டியக்கலையே—என்ற மெட்டு.

இராகம்-நாட்டக்குறிஞ்சி] [தாளம்-ஆதி

பல்லவி

எனக்கருள் செய்திட உனக்குள மிலையா?
ஏனினும் தாமதம் இது பெரும் மலையா? (என

அனுபல்லவி

வனக்குற மான் வள்ளி மருவிடும் வேலையா!
மனமொரு நிலையுறும் மார்க்கம் நீ சொல்லையா!

சரணம்

நினதருள் வலியினுல் எனதிருளோட்டு!
நித்யா னந்தம் பெற நீ வழி காட்டு!
நனவிலுங் கனவிலும் நவில்வதுன் பாட்டு
நாட்டக் குறிஞ்சியாம் ராகத்தைக் கேட்டு (என

24 நிஜமர் மமுலனு—என்ற மெட்டு.

பல்லவி

வருவா ரோ? வர மாட்டாரோ? எனும்
மர்ம மறிந்து வா சகீ! (வரு

அநுபல்லவி

திருமுருகா! என் றுருகி நின்றேன்!
சேவ லங்கொ டிக்கு மார
தேவ னிங்கெ னைக்கு லாவ (வரு

சரணம்

ஒருநா ளொருபொழு தாகிலு மவரின்றி
உண்ணே னுறங்கேன் உண்மையே.
அறுமா முகச்சீர் பெருமான் அடியை
ஆவ லாய்ச் சுருளி யாண்டி
பாவி னல்ப ராவு வேன். (வரு

25 எந்தனிடது தோளும்—என்ற மெட்டு.

இராகம்-கரகரப்ரியா] [தாளம்-ஆதி

கண்ணிகள்

செந்தில் நகருறையும் கந்தன் திரு உருவம்
சிந்தை கவர்ந்ததடி தோ ழீ!
கந்தம லர்நிறைந்த நந்தவனந்தனிலே
வந்தெனை யேதழுவி னண் டீ தோ ழீ! (செந்

காதற்கனி கொடுத்து மாதை மயக்கி விட்டான்
ஏதடி ஊணுறக்கம் இல்லை தோ ழீ!
போதம் நிறைந்தகவி புகலும் சுருளி யாண்டி
போற்றும் குருபரன்பால் போய் நீ சொல்லி வாராய்! (செந்

...ரை காமராசர் பல்கலை...

**26** காதலெல்லாம் கொள்ளை கொண்டாய்—என்ற மெட்டு.

இராகம்-சிந்து பைரவி] [தாளம்-ஏகம்

கண்ணிகள்

கானக்குற வள்ளி மகிழ் கந்தா கந்தா
காதல் கொண்டு வாடுகிறேன் கந்தா கந்தா
தீனக் குரல் கேட்டிரங்கும் கந்தா கந்தா
சேவலங் கொடிக் குமரக் கந்தா கந்தா (கானக்

காதலுறும் மாதர்தமைக் கந்தா கந்தா
கைவிடுதல் ஞாயமல்ல கந்தா கந்தா
சீதப் புனல் சூழும் செந்தூர்க் கந்தா கந்தா
சீக்கிரத்தி லென்னிடம் வா கந்தா கந்தா (கானக்

ஊணுறக்க மொன்றுமில்லை கந்தா கந்தா
உன்னழகி லீடுபட்டேன் கந்தா கந்தா
ஞான மன்றி லாடும் சிவன் மைந்தா கந்தா
நாரி யெனை நாடி வாராய் கந்தா கந்தா (கானக்

நீலமயி லேறிவருங் கோலங் கண்டு
நின்மீது மையல் கொண்டேன் கந்தா கந்தா
மாலை மதி நேர மிப்போ கந்தா கந்தா
வந்தெனைக் கலந்திடுவாய் கந்தா கந்தா. (கானக்

## கண்ணன் காதல்.

**27** சந்த்ர சூரியர்—என்ற மெட்டு

இராகம்-இந்துஸ்தான் பியாக்] [தாளம்-ஆதி

கண்ணிகள்

காதல் மிகுந்த மாதை மறப்பது
கண்ணனுக் கழகாமோ?
ஏதேதோ ஆசை வார்த்தைகள் கூறி
எந்தனை ஏய்த்து விட்டான். (காதல்

அன்றொரு நாளென்னை அந்திப் பொழுதிலே
ஆற்றங் கரையில் கண்டான்
நின்று புன்னகை செய்தே என்னை மயக்கினான்
நிம்மதி யில்லையடீ! (காதல்

குழலெடுத்தூதி அபிநயங் காட்டினான்
கோபாலகிருஷ்ணன்.
இளகியஉள்ளம் படைத்தஇப்பேதை
இதயம் கவர்ந்தாண்டீ! (காதல்

கண்ணனைக் கண்டு களித்தாலன்றி யென்
கண்கள் துயில் கொள்ளா.
எண்ணமனைத்தும் கண்ணனிடம் சொல்
எந்தன் உயிர்த்தோழீ! (காதல்

## சிவன் துதி.

**28** எப்போ வருவாரோ—என்ற மெட்டு.

இராகம்-ஜோன்புரி] [தாளம்-ஆதி

பல்லவி

சித்தமிரங்காதா! சிதம்பர நாதா! (சித்

அனுபல்லவி

பித்தனே! பிறைசூடும் பெருமானே! நின் (சித்

சரணங்கள்

தற்பரனே! உன் தாள் பணிந் தேனே
பொற்புறு பார்வதி புகழுங் கோமானே! (சித்
முத்திக்கு வித்தே முடிவிலாத் தேவே!
எத்திக்கும் தித்திக்கும் இன்கனிக் கோவே (சித்
அருள்செயும் நீதா! அமலசுபோதா
சுருளி யாண்டி பணிந்து தொழுமலர்ப் பாதா!
(சித்

**29** ப்ரூஹி முகுந்தேத்தி—என்ற மெட்டு.

இராகம்-பீல், செஞ்சுருட்டி] [தாளம்-ஆதி

பல்லவி

ஈசனை மறவாதே! மனமே (ஈச

அநுபல்லவி

நேசமாய் நீ தினம் அரன் புகழ் பாடு
நித்யா னந்தசு போ தம் நா டு (ஈச

மாதவத் தோர்கள் தம்முடன் கூடு
மாசறு வாழ்வினை யே நீ தே டு (ஈச

அருளுரு வாகிய அம்பல நாதன்
சுருளி யாண்டி தொழும் தூ ய பா தன் (ஈச

**30** மநவிநி விநுமா—மென்ற மெட்டு.

இராகம்-ஜய நாராயணி] [தாளம்-ஆதி

பல்லவி

சிதம்பர நாதா—இரங்கலா காதா

அநுபல்லவி

பதம் பணிந்தேன் நனி இதந் தருவா யினி
பரம தயா நிதி நீயல வோ? (சித

சரணம்

அருள் செயும் நீதா அம்புய வேதா
பரவு பொற் பாதா பார்வதி நாதா
தெருள் மிகு போதா செவ்விய கீதா
சுருளி யாண்டி பணியும் சுகுண விநோதா! (சித

## ஈகை வேண்டும்

**31** இன்னமோரு ஸ்தலம்—என்ற மெட்டு.

இராகம்-தோடி] [தாளம்-ஆதி

பல்லவி

ஈகையில் லாதவர் இருந்தென்ன போயென்ன
இவரா லேது பயன்? இக மதிலே (ஈ

அனுபல்லவி

ஆகமழிந்திடும் நிலைத்துநிற்காது
ஆனலறம்கெடா தவனியின் மீது (ஈ

சரணம்

தேகம் சதமல்ல! காற்றுள்ள போதே
செம்மையாய்த் தூற்றுங்கள் பொருள் படைத்தோரே!
மேகம் பொழிவதுபோல் பலன் கருதாமல்
வேண தருமமின்றே விரைந்து செய்வீரே! (ஈ

## அன்பே அருஞ்சிவம்.

**32** தேடித் திரியாதே—என்ற மெட்டு.

இராகம்-நாகஸ்வராளி] [தாளம்-ஆதி

பல்லவி

அன்பால் உலகாள்வோம்—என்றும் (அன்

அனுபல்லவி

அன்பற்றஉடம்பால் என்பயனாகும்?
அன்பேஅருஞ்சிவம் எனும் பொருளாகும். (அன்

சரணம்

என்பும் பிறர்க்குப்பயன் தந்திட வேண்டும்.
ஏழை எளியவர்கட் கிரங்கிட வேண்டும்.
துன்ப மெவர்க்கும் செயத் துணியாதீர், யாண்டும்
சுத்தசுகானந்தம் துலங்கிடத் தூண்டும் (அன்

சுபம்.

# பொருளுதவியாளர்கள்.

| | | |
|---|---|---|
| 1 | திருவாங்கூர் ஆடுகிடந்தான் தாவளம் ஏல விவசாயிகளின் பாதுகாப்புச் சங்கம், கோம்பை. | ரூ. 15—0—0 |
| 2 | ஜனுப் உ.ம.சே. முகியித்தீன்பிள்ளை ராவுத்தர் அவர்கள், காந்திப்பாறை எஸ்டேட் சொந்தக்காரர் & முகையதீன் பலதுறைக் கோவை, வண்ணம் பாட்டுடைத் தலைவர், கோம்பை. | ரூ. 10—0—0 |
| 3 | ஜனுப் உ. ம. சே. சின்னமுகியித்தீன்பிள்ளை ராவுத்தர் அவர்கள், சி. மு. & சன்ஸ், காந்திப்பாறை எஸ்டேட் சொந்தக்காரர், கோம்பை. | ரூ. 10—0—0 |
| 4 | திருவாளர் K. துரைச்சாமி கவுடர் அவர்கள் ஜமீன் மரபினர், கோம்பை. | ரூ. 10—0—0 |
| 5 | திருவாளர் ந. அ. கு. அழகர் ராஜா அவர்கள், மஹேஸ்வரி விலாஸ் ராஜா எஸ்டேட்டின் சொந்தக்காரர், தேவாரம். | ரூ. 10—0—0 |
| 6 | திருவாளர் A. அருணசலம் செட்டியார் அவர்கள், காரியதரிசி, C. P. C. Bank Ltd., தேவாரம். | ரூ. 10—0—0 |
| 7 | திருவாளர் R. சன்னுசி செட்டியார் அவர்கள் காரியதரிசி, T. C. P. A. தேவாரம். | ரூ. 5—0—0 |
| 8 | திருவாளர் T. ஷண்முகவேல் செட்டியார் அவர்கள், உப காரியதரிசி, T. C. P. A. கோம்பை. | ரூ. 5—0—0 |

| | | | |
|---|---|---|---|
| 9 | திருவாளர் கி. ராஜகோபால் நாயுடு அவர்கள் தலைவர், கோவாபரேடிவ் ஸ்டோர், தேவாரம். | ரூ. | 5—0—0 |
| 10 | திருவாளர் T. குமரவேல் கவுடர் அவர்கள் மிராஸ்தார், பண்ணைப்புரம் | ரூ. | 5—0—0 |
| 11 | திருவாளர் P. T. வடிவேல் கவுடர் அவர்கள் மிராஸ்தார், பண்ணைப்புரம். | ரூ. | 5—0—0 |
| 12 | A. S. K. R. பொன்ராஜ் & Co, ஏலக்காய் வியாபாரம், தேவாரம். | ரூ. | 5—0—0 |
| 13 | வாசவி கார்டமம் கம்பெனி, கோம்பை. | ரூ. | 5—0—0 |
| 14 | திருவாளர்கள் S. P. G. ராமசாமி நாடார் & சன்ஸ், ஏலக்காய் வியாபாரம், தேவாரம். | ரூ. | 5—0—0 |
| 15 | திருவாளர்கள் தி. ர. ரா. சன்ஸ் & தி. ர. தி. சன்ஸ் அவர்கள், மிராஸ்தார், கோம்பை. | ரூ. | 5—0—0 |
| 16 | திருவாளர் ந. ல. நல்லதம்பி செட்டியார் அவர்கள், டிரஸ்டி, ஸ்ரீ திருமலைராயப் பெருமாள் தேவஸ்தானம், கோம்பை. | ரூ. | 5—0—0 |
| 17 | ஜனப் K. அகமதுசாகிப் அவர்கள், தலைவர், C. P. C. Bank Ltd., கோம்பை. | ரூ. | 5—0—0 |
| 18 | மெஸ்ஸர்ஸ் காந்தி பிரதர்ஸ், ஏலக்காய் வியாபாரம், போடிநாயக்கனூர். | ரூ. | 5—0—0 |
| 19 | திருவாளர் M. S. பகவதிமுத்து சேர்வை அவர்கள், காரியதரிசி, திருவாங்கூர் ஏல விவசாயிகளின் சங்கம், கோம்பை. | ரூ. | 5—0—0 |
| 20 | திருவாளர் S. K. துரைச்சாமி பிள்ளை அவர்கள், மிராஸ்தார், உத்தமபாளையம். | ரூ | 5—0—0 |
| 21 | ஜனப் கா. சி. முகமது இஸ்மாயில் அவர்கள் துணைத்தலைவர், தமிழ் இலக்கிய மன்றம், உத்தமபாளையம். | ரூ. | 5—0—0 |

22 V. O. A. & S. K. ராமசாமி கவுடர் & Co.,
ஏலக்காய் வியாபாரம், பண்ணைப்புரம். ரூ. 5—0—0

23 திருவாளர் R. P. சாலமலைப் பெருமாள் மணியகாரர் அவர்கள், காரியதரிசி, ஸ்ரீராம பஜனைச் சங்கம், கோம்பை. ரூ. 5—0—0

24 திருவாளர் V. S. கந்தசாமி செட்டியார் அவர்கள், மிராஸ்தார், பூதிப்புரம். ரூ. 5—0—0

25 திருவாளர் மந்தைய, சி. திருமலைஜக்குகவுடர் அவர்கள், கோம்பை. ரூ. 3—0—0

26 திருவாளர் அ. சுப்பய கவுடர் அவர்கள் கோம்பை. ரூ. 3—0—0

27 திருவாளர் V. S. கோபாலகிருஷ்ணன் செட்டியார் அவர்கள், கோம்பை. ரூ. 3—0—0

28 திருவாளர் U. S. இராமச்சந்திர ஐயர் அவர்கள், உத்தமபாளையம். ரூ. 3—0—0

29 திருவாளர் A. P. குருசாமி நாடார் அவர்கள் போடிநாயக்கனூர். ரூ. 2—0—0

30 திருவாளர் V. S. ராமலிங்கம் செட்டியார் அவர்கள், கோம்பை. ரூ. 2—0—0

31 திருவாளர் V.S. வெங்கிடாஜலம் செட்டியார் அவர்கள், கோம்பை. ரூ. 2—0—0

32 திருவாளர் R. L. லட்சுமயன் செட்டியார் அவர்கள், கோம்பை. ரூ. 2—0—0

33 திருவாளர் V. கிருஷ்ணையர் அவர்கள் கோம்பை. ரூ. 2—0—0

முருக நிலையம்

கோம்பை